1979 மார்ச் 6]

பெறுகிறனர். ஒரு மாதம் முன்னதாக தெரியப்படுத்தப் பட்டோ அல்லது அதற்குப்பதிலாக ஒரு மாதச் சம்பளத்துடனோ அன்றி அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள்.

உதவி குற்ற விசாரணை வழக்கறிஞர்கள்.

*'வினா எண். 242— திரு. ஒ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) போலீஸ் கமிஷன் அறிக்கையில் முதல்நிலை, இரண்டாம் நிலை உதவி அரசு குற்ற விசாரணை வழக்கறிஞர்களின் (A.P.P-I & A.P.P-II) தகுதியை உயர்த்துவது குறித்து பரிந்துரைகள் ஏதேனும் செய்துள்ளதா ?

(ஆ) அந்தப் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

திரு. எம். ஏ. ஜெயவேலு [அமைச்சரின் பேரவைச் செயலர்) : அரசு உதவி வழக்கு நடத்துநர் (நிலை 2) ஊதிய வீதத்தை உயர்த்துவது பற்றி பரிசீலனை செய்து கொண்டு இருக்கிற நேரத்தில், மூன்றாவது ஊதிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அப்போது காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பரிந்துரை செய்து அனுப்பிய செயற்குறிப்பு ஊதியக்குழுவிற்கு அனுப்பப் பட்டது. ஊதியக் குழு அளித்த பரிந்துரைகளை அரசு ஏற்று, அதை அமுல் படுத்திவருகிறது. அந்த வகையில் அவர்களுக்கு சம்பளம் உயர்வு 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி : தலைவரவர்களே, ஏ. பி. பி. கிரேட் 2 அவர்களின் தகுதியை உயர்த்துவதைப் பற்றி நான் கேள்வி கேட்டு இருக்கிறேன். ஆனால், அமைச்சரின் செயலர் அவர்கள் ஊதிய உயர்வைப் பற்றிச் சொல்கிறார்கள். தகுதி உயர்த்துவது குறித்து எடுக்கப்பட்ட முடிவு என்ன ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, அரசு உதவி வழக்கு நடத்துனர் (நிலை 2) பதவி வகிப்போருக்கும் முதல் நிலை வழக்கு நடத்துனர் பதவிவகிப்போருக்கும் இடையே இடைவெளி நிறைய இருக்கிறது. இருப்பினும் தகுதி உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த போலீஸ் துறையைச் சேர்ந்த தீ அணைக்கும் படைப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு போதுமான பதவி உயர்வோ அல்லது 8 மணி நேர வேலையோ அளிக்கப்படுவது இல்லை. அவர்கள் 12 மணி நேரத்திற்கும் அதிகமாக வேலை வாங்கப்படுகிறார்கள். அவர்கள் 8 மணி நேரம் தான் வேலை வாங்க வேண்டும் என்று தெரிவித்து இருந்தார்களே, அது சம்பந்தமாக அரசு முடிவு செய்து இருக்கிறதா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இது சட்டத்துறையைச் சேர்ந்த கேள்வி அல்ல. தனிக் கேள்வி போடவும்.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, செங்கல்பட்டில் தேர்வு இல்லாமல் ஏ. பி. பி. கிரேட் 2-வாக யாராவது நியமிக்கப்பட்டு இருந்தால், அவர் யார், எப்படி நியமிக்கப்பட்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, திரு. ராதாகிருஷ்ணன் என்பவர் சென்னையில் ஓர் ஆண்டுக்கு மேல் உதவி அரசு வழக்கறிஞராக பணியாற்றிவந்தார். மாவட்டங்களில் பணியாற்றிய 10 உதவி அரசு வழக்கறிஞர்கள் சென்னையில் நியமிக்கப் பெற்ற காரணத்தால் ஏழு பேர் மூன்று ஆண்டு முதல் ஒன்றரை ஆண்டு வரை பணியாற்றியவர்கள். வேலை நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் காலியான இடங்களில் மூவர் நியமிக்கப்பட்டனர். திரு. ராதாகிருஷ்ணன் என்பவர் செங்கல்பட்டில் தற்காலிகமாக பணியாற்றி வந்தார். சென்னையில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞராக இருந்த ஓர் அம்மையார் இறந்து விட்டதால், அவர் இருந்த இடம் காலியானது. ஆகவே, அந்த இடத்தில் ஏற்கனவே வேலை நீக்கம் செய்யப்பட்ட ஏழுபேரில் மூவர் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டு விட்டதால், நாலாவதாக உள்ள திரு. ராதாகிருஷ்ணன் மீண்டும் நியமிக்கப்படலாம் என்று போலீஸ் கமிஷனர் பரிந்துரை செய்தார். திரு. ராதாகிருஷ்ணன் அவர்களும் கேட்டுக் கொண்டார். அரசு அந்தப் பரிந்துரையை ஏற்று திரு. ராதாகிருஷ்ணன் அவர்களை நியமனம் செய்தது. அவர் ஏற்கனவே ஓர் ஆண்டுகாலம் சென்னையில் பணியாற்றியிருக்கிறார் என்ற காரணத்தால் அவர் நேரடியாக நியமிக்கப்பட்டு இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–20)

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஏ. பி. பி-1, எத்தனை காலி இடங்கள் இருக்கின்றன? ஏ. பி. பி-2, எத்தனை காலி இடங்கள் இருக்கின்றன? ஏ. பி. பி-1,க்கு என்னென்ன தகுதி இருக்க வேண்டும்? ஏ. பி. பி-2க்கு என்னென்ன தகுதி இருக்கவேண்டும்?

1979 மார்ச் 6]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, எத்தனை இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதற்குத் தனியாக கேள்வி போடவும். ஏ. பி. பி-2 பதவிக்கு 2 ஆண்டுகள் வழக்கறிஞராக இருக்க வேண்டும். ஏ. பி. பி-2 ஆக பணியாற்றுகின்றவர்கள் சர்வீசின் அடிப்படையில் ஏ. பி. பி.-1 ஆக பதவி உயர்வு பெறுகின்றார்கள்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவைர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டாம் நிலை ஏ. பி. பி. பதவிக்கு வெகு நாட்களுக்கு முன்னால் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால் இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. அதற்கு காரணம் என்ன?

திரு. எம். ஏ.ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாம் நிலை ஏ. பி. பி. தேர்வுக்கு ஒரு குழுவை நியமிக்கிறார். அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையை அரசுக்கு அனுப்பும். அந்த வகையில் குழு பரிந்துரையை அரசுக்கு அனுப்பி இருக்கிறது. அது அரசின் ஆய்வில் இருக்கிறது.

தனியார் பள்ளிகளில் அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பு.

*வினா எண் 243 திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் பள்ளிகளிலும் அரிசனங்களுக்கு 18% வேலை வாய்ப்பு கொடுக்க அரசு ஆணையுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம். சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகள் தவிர, இதர தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியப் பணியிடங்களில் 18 சதவீதம் அரிசனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு ஆணை எண். 1896, கல்வி, நாள் 1978-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ம் நாள் தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டவிதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் அரிசனங்களுக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவம் வழங்குவதில் சிறுபான்மையோர் பள்ளிகள் தவிர என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள், யார் அந்த சிறுபான்மையோர்? என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் அங்கு இருக்கக்கூடிய தனியார் பள்ளிகளில் 30, 40 ஆசிரியர்கள் வேலை பார்க்கும் பள்ளிகளில் ஒருவர் அல்லது இருவர் மட்டும்